விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 29 வியாழக்கிழமை (14.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 260

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு அரசாங்கம் இணக்கம் தெரிவிப்பு!

## சமாதான செயலக பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைபுலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதாக அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கோஹன்ன தெரிவித்துள்ளார்.

நிபந்தனையற்ற பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்திருப்பதை அரசாங்கம் நிராகரிப்பதாக பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ள கருத்தை அவர் மறுத்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த-சோமவன்ஸ நேற்று விசேட சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பி.தலைவர் சோமவசன்ச அமரசிங்கவிற்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று காலை நடைபெற்றது.

இச் சந்திப்பில் அரசுக்கு ஜே.வி.பி. ஆதரவு வழங்குவது தொடர்பாகவும் எதிர்காலத்தில் அரசுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## 600 பயணிகளை ஏற்றிக் கொண்டு மற்றொரு கப்பல் இன்று புறப்பாடு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறையிலிருந்து 600 பயணிகளை ஏற்றிக்கொண்டு மற்றொரு கப்பல் இன்று அதிகாலை திருகோணமலை நோக்கி புறப்படுகிறது.வெளிநாட்டு கடவுச்சீட்டை உடையவர்கள், வெளிமாவட்ட அரச உத்தியோகஸ்தர்கள் என 600 பேர் புறப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை 800 பயணிகளை ஏற்றிக்கொண்டு திருமலை சென்ற கப்பல் சேவையை அடுத்து திடீர் அறிவித்தலில் மற்றொரு பயணிகள் கப்பல் சேவை ஏற்பாடு செய்யப்பட்டதால் நேற்றுக் காலை 6 மணி தொடக்கம் மார்ட்டின் வீதிச்சந்தியில் ஆயிரக் கணக்கான பயணிகள் குவிந்து நின்றனர்.

சென்ற முறையைப் போல அல்லாமல் இந்த முறை கப்பலில் செல்வதற்கான பயணிகளின் பெயர் ஒலிபெருக்கி மூலம் அழைக்கப்பட்டதால் முண்டி அடித்துக்கொண்டு செல்லும் நிலைமை காணப்படவில்லை.

இப் பயணத்தில் வெளிநாட்டில் இருந்து வந்தவர்களுக்கே முன்னுரிமை அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பெயர் குறிப்பிட்டு அழைக்கப்பட்டவர்கள் பின்னர் சிங்கள மகா வித்தியாலயத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு சோதனைகளின் பின் பஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு காங்கேசன்துறை முகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதேவேளை-சன நெருக்கடி காரணமாக ஆஸ்பத்திரி வீதியில் (04 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே -அரசு இன்று சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று அரச சமாதானக் குழுத்தலைவரும் அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவை சந்தித்துப் பேசவுள்ளார்.

இச் சந்திப்பில் இணைத்தலைமை நாடுகளின் முடிபுகள் குறித்து விவாதிக்கவுள்ளார். நேற்று முன்தினம் நடைபெற்ற இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் அடுத்தமாதம் முற்பகுதியில் ஒஸ்லோவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டுமென (04 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்திற்காக இராணுவமில்லை

### இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் நடத்துவதற்காக இராணுவம் இல்லை என்று சிறிலங்கா இராணுவத்தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டினது இராணுவம் எந்த வகையான ஒருயுத்தநடவடிக்கையிலும் ஈடுபடாது. ஆனால் இந்த நாட்டையும் நாட்டினது தேசியபாது காப்புக்காகவும் போராடத்தயாராகவுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினது (04 ஆம் பக்கம் பார்க்க)

## இடம், திகதி தெரிவு செய்வதில் நோர்வே தீவிர நடவடிக்கை

### சந்தர்ப்பத்தை நழுவவிடமுடியாது என்கிறார் பௌயர்

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான பேச்சுவார்த்தைக்கான இடம், திகதி என்பனவற்றை தெரிவு செய்வதில் நோர்வே ஈடுபட்டுள்ளதாக இலங்கைக்கான விசேட தூதுவர் ஜோன் ஹான்ஸன் பௌயர் தெரிவித்துள்ளார்.

இணைத் தலைமை நாடுகளின் அறிவிப்புத் தொடர்பாக பி.பி.ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகள் நேற்று முன்தினம் நடாத்திய கூட்டத்திற்கு ஒரு மணிநேரம் முன்னதாகவே விடுதலைப்புலிகள் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் தயார் என அறிவித்திருந்தனர் என இலங்கைக்கான நோர்வேயின் விஷேட சமாதானத்தூதுவர் ஜோன் ஹான்சன் பௌயர் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தாம் வருவதாக அறிவித்திருந்தமையை இணைத் தலைமை நாடுகள் வரவேற்றிருந்ததாகவும் இரு தரப்பும் அனைத்து வன்செயல்களையும் நிறுத்தி விரைவாகப் பேச்சுவார்த்தைக்குச் செல்லுமாறு வலியுறுத்தியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அரசையும் விடுதலைப்புலிகளையும் ஒஸ்லோவில் ஓகஸ்ட் மாதம் முற்பகுதியில் கூடி பேச்சுவார்த்தை நடத்துவதற்கும் இணைத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புத் தலைவர் கிளிநொச்சிக்கு விஜயம்

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் லான்ஸ் சொஹான் சொல்பேர்க் நாளை மறுதினம் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேசவுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது என இருதரப்பினரும் இணங்கிக் கொண்ட நிலையில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இச் சந்திப்பில் அரசிற்கும் விடுதலைப் புலிகளிற்குமிடையி (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிரனைட் தாக்குதல் 3 பெண்கள் உட்பட 17 பேர் காயம்

(வவுனியா)

வவுனியா நகர மரக்கறி சந்தைக்கு அருகில் உள்ள கோழிக்கடைப் பகுதியில் நேற்று முற்பகல் 10.40 மணியளவில் இடம் பெற்ற கிரனைட் குண்டுத் தாக்குதலில் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் 3 பெண்கள் உட்பட 17 பேர் காயமடைந்ததாக வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரி ஏ.நேசராஜா தெரிவித்துள்ளார்.

காயமடைந்தவர்கள் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக் (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வாழ்வகம்' தலைவியின் மறைவிற்கு ராமகிருஷ்ண சேவாச்சிரமம் இரங்கல்

(யாழ்ப்பாணம்)

வாழ்வகம்–விழிப்புலன் வலுவிழந்தோர் இல்லத்தின் ஸ்தாபகரும் தலைவியுமான செல்வி அன்னலெட்சுமி சின்னத்தம்பி அம்மையாரின் மறைவிற்கு ஸ்ரீ ராமகிருஷ்ண சேவாச்சிரமத்தினர் இரங்கல் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு பெற்று பிரமச்சரிய வாழ்வைக் கைக்கொண்டு எம் மண்ணில் கண்பார்வையற்ற சிறார்களுக்காகத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர்.

பூரணதின விழா மற்றும் கொழும்பு ராமகிருஷ்ண மிசன் பவள விழாவிற்கு வாழ்வக மாணவர்களை அழைத்துச் சென்ற நிகழ்வு மற்றும் தனிப்பட்ட முறையில் அம்மையாருடன் நெருங்கிப் பழகும்போது அம்மையாரின் எல்லையற்ற அன்பை உணர்ந்து கொள்ள முடிந்தது.

இல்லத்தில் உள்ள பிள்ளைகளை தன் சொந்தப்பிள்ளைகளாகக் கருதி வாழ்ந்த அவரது வாழ்க்கை ஒப்புயர்வற்றது.

எமது ஆழ்ந்த துயரத்தினை வாழ்வக நிர்வாகத்தினருக்கும் ஆசிரியர்களுக்கும் அன்புச் செல்வங்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கர்ப்பிணித் தாய்மார்களுக்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை

யாழ்.மாநகர சபைஎல்லைக்கு வெளியேயுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் தமக்கு வழங்கப்பட்ட பிரசவத் திகதிக்கு ஓரிரு தினங்களுக்கு முன்பாக அருகிலுள்ள வைத்தியசாலையின் அனுமதியைப் பெற்று அங்கு தங்குமாறு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியுள்ளதாவது;

பிரசவத் தாய்மார்களை வைத்தியசாலைக்கு உடனடியாகக் கொண்டு செல்வற்கு ஊரடங்கு நேரத்திலும் அர்த்த இராத்திரியிலும் அமைப்புக்களிடமிருந்தும் மற்றும் தனிப்பட்டவர்களிடமிருந்தும்இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளைக்கு தொலைபேசி அழைப்புக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

இவை உடனுக்குடன் பூரணமாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் யாழ்ப்பாண மாநகர வட்டாரத்திற்கு அப்பால் வெகு தூரத்திலிருந்து வரும் அழைப்புக்களால் சில வேளைகளில் அம்புலன்ஸுக்குள்ளேயே பிரசவம் நடைபெறும் நிலைமையும் வரலாம்.

காலதாமதமாகி வைத்தியசாலைக்குக் கொண்டு வரவேண்டிய நிலையும் உள்ளது. எனவே பிரசவத் தாய்மார்கள் தங்களுக்கு வழங்கிய குறித்த திகதிக்கு ஒன்று அல்லது இரு நாட்களுக்கு முன் அவ்வவ் பிரதேசங்களுக்கு அண்மையில் இருக்கும் வைத்தியசாலைகளில் அனுமதி பெற்று தங்குமாறு அல்லது அவர்களின் அம்புலன்ஸ் மூலமாக யாழ்.வைத்தியசாலைக்கு உடனடியாக வர முடியும் என ஆலோசனை வழங்கப்படுகிறது.

அவ்வாறு முடியாத பட்சத்தில் யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் தங்கியிருந்தால் எங்கள் சேவையை இலகுவாகவும் வசதியாகவும் விரைவாகவும் செய்ய முடியும்.

மாநகர எல்லைக்குள் அல்லது மிக அண்மையில் தங்க வசதி குறைந்தவர்கள் இது விடயமான உதவியோ மேலதிக தகவலையோ பெறுவதற்கு எந்நேரமும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் 222 2561 அல்லது 222 9792 என்ற தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளலாம் என பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் மேலும் தெரிவித்தார். (ச–134)

# சமுர்த்தி முத்திரைகள் விநியோகிக்கப்படவில்லை

சமுர்த்தி நிவாரணம் பெறும் இரண்டு மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தினருக்கு அவர்களுக்குரிய முத்திரை வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கான முத்திரைகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான உலர் உணவு விநியோக மும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் ஏனையவர்களுக்கு வழங்கப்படவில்லை என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சமுர்த்தி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ச–133)

# வெளிமாவட்டக் கல்வியாளர்களுக்கு இரு மாதத்திற்கான சம்பள முற்பணம்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கல்விப் பணியாளர்களுக்கு முற்பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. இது தொடர்பாக மாகாணக் கல்வித்திணைக்களம் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

விடுமுறை நிமிர்த்தம் யாழ்.வந்து கடமைக்குத்திரும்ப முடியாதுள்ள வெளிமாவட்டங்களைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர்களுக்கே இந்த முற்பணம் வழங்கப்படவுள்ளது.

அவர்களை இன்று காலை யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்திற்கு வந்து முற்பணம் பெற்றுக் கொள்வதற்கான படிவத்தினை பூரணப்படுத்தி வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு ஓகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களுக்கான முற்பணம் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை ஓகஸ்ட் மாத சம்பளப் படி வழங்கப்பட்டுள்ள போதிலும் அச் சம்பளம் வழங்கப்படமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச–133)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் மீண்டும் 'பாஸ்' நடைமுறை அமுல்!

யாழ்.போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிடுவதற்கு 'பாஸ்' முறை அமுல்படுத்தப்படவுள்ளது.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த இந்த நடைமுறை பாதுகாப்புக் காரணங்களுக்காக எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படவுள்ளது என பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

ஒரு நோயாளிக்கு மூன்று அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும். அதனைப் பெற்று ஒரே நேரத்தில் மூவர் மட்டுமே அந்நோயாளியைப் பார்வையிட முடியும் என யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் ஞானசோதி அறிவித்துள்ளார். (ச)

# வெளிமாவட்டத் தபால்கள் கப்பல் மூலம் அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த மாதம் 11 ஆம் திகதி முதல் தேங்கிக் கிடந்த வெளிமாவட்டத் தபால்கள் நேற்றுக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன.

அனைத்துப் பிரதேச தபாலகங்களூடாக நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிவரையும் சேகரிக்கப்பட்ட தபால்களும் நேற்றுக் காலை 6 மணிக்கு யாழ்.நகரப் பகுதியில் விசேடமாகச் சேகரிக்கப்பட்ட தபால்களுமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் எவையும் கப்பல் மூலம் எடுத்து வரப்படவில்லை எனவும் எனினும் யாழ்ப்பாணத்திலிருந்து தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் அடுத்து வரும் சரக்குக் கப்பல்களில் யாழ்ப்பாணத்துக்கான தபால் பொதிகள் எடுத்து வரப்படலாம் எனவும் நம்பிக்கை வெளியிடப்பட்டது.

இதேவேளை உள்ளூர் தபால் சேவைகள் கடந்த வாரம் முதல் வழமை போன்று செயற்படுவதாகவும் தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ச–133)

# சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இரு யுவதிகளில் ஒருவர் மர்ம மரணம்

## மற்றையவர் வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டி வீதி அச்செழுவில் இராணுவத்தினரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட யுவதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மற்றையவர் வலிப்பு வந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். உயிரிழந்தவர் சாவகச்சேரியைச் சேர்ந்த தர்ஷிகா பத்மநாதன் (வயது–24) என்பவர் என அவரின் சடலத்திலிருந்து மீட்கப்பட்ட தேசிய அடையாள அட்டையிலிருந்து தெரியவந்துள்ளது.

வலிப்பு வந்துசிகிச்சை பெற்று வருபவர் தாவளை இயற்றாளையைச் சேர்ந்த பவளமதி கந்தையா (வயது–26) என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

குறித்த இரு யுவதிகளும் கடந்த திங்கட்கிழமை அச்செழுவில் உள்ள உறவினர் வீட்டிற்குச் சென்ற சமயம் வழிமறித்த இராணுவத்தினர் தேசிய அடையாள அட்டையைக் கேட்டபோது உயிரிழந்த பெண் தனது அடையாள அட்டையைக் காட்டியுள்ளார்.

மற்றைய பெண்ணிடம் இல்லாமையால் இராணுவத்தினர்அச்செழு முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

பெண் இராணுவச் சிப்பாய் விசாரணைக்காக வருவதற்கு முன் வலிப்பு வந்து ஒருவர் மயக்கமடைய மற்றையவர் உயிரிழந்து காணப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

எனினும் இருவரும் சயனைட்அருந்திய போது ஒருவர் உயிரிழந்ததாகவும் மற்றையவர் மயக்கமடைந்ததாகவும் இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக நேற்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் ஒரு யுவதி எவ்வாறு உயிரிழந்தார் என மரண விசாரணை மேற்கொண்டு சட்ட வைத்திய அதிகாரியை அறிக்கை சமர்ப்பிக்கும்படி கோருமாறு அச்சுவேலிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

எனினும் அச்சுவேலி பொலிஸாரால் உரிய நேரத்தில் நீதிபதியின் உத்தரவை சட்டவைத்திய அதிகாரியிடம்ஒப்படைக்காமையால் பிரேத பரிசோதனை அறிக்கையை நேற்றுத் தயாரிக்க முடியவில்லை. (ச–5)

# மண்டைதீவு திருவெண்காட்டில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறும். சங்காபிஷேகத்தை இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பாலச்சந்திரக் குருக்கள் நடத்தி வைப்பார். (ந)



திடீரென ஏற்பாடு செய்யப்பட்ட திருமலை செல்வதற்கான கப்பலில் இடம்பிடிப்பதற்கென பயணப் பொதிகளுடன் மார்ட்டீன் வீதிச் சந்தியில் குவிந்து நிற்கும் பயணிகளைப் படங்களில் காணலாம்.

படங்கள்:-திலீவின்பன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல எண்ணங்கள், நல்ல மொழிகள், நல்ல செயல்கள் இவற்றில் உள்ள சக்தி அளவற்றதாகும். அதேயே நாம் பயன்படுத்த வேண்டும்.

–ராஜாஜி

வலம்புரி

# ஆறுதல் தரும் செய்தி அரங்கேறி சபை புகுமா?

ஒக்டோபர் மாத முற்பகுதியில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெறும். இவ்வாறு இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருண்ட கண்டத்தில் ஒ ளிக்கீற்றுக்காகக் காத்திருந்த தமிழ் மக்களுக்கு இணைத்தலைமை நாடுகள் அறிவித்த இச்செய்தி தேவ வாக்காகவே கருதப்படும்.

நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் பாங்கில் கூறுவதாயின், ஐயா! பாலைவார்த்தாய் என்று சொல்லிக் கொள்ளலாம்.

படுகொலைச் செய்திகள், இடப்பெயர்வுகள், உணவுத் தட்டுப்பாடு, வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்தின்மை இவையெல்லாம் யாழ்.குடா நாட்டு மக்களின் குருதியை உறைய வைத்துள்ளன.

எங்கு போகலாம், எங்கு தங்கலாம், இந்த இருள் எப்போது விலகிக் கொள்ளும் என்ற ஏக்கத்தின் மத்தியில், இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் என்ன முடிபு எடுக்கப்படும் என்பதை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்தனர்.

இந்த எதிர்பார்ப்புக்குப் பாலை வார்த்ததுபோல் எதிர்வரும் ஒக்டோபர் மாத முற்பகுதியில் அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒஸ்லோவில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு எதிர்பார்ப்புக்கு மேற்பட்டதாக இருப்பினும் இது நடைமுறைக்கு வருமா? அரங்கேறி சபை புகுமா? என்ற கேள்வி உடைந்து போன மக்களின் மனங்களைக் கிளறிக்கொண்டே இருக்கின்றது.

அதேநேரம் அரசும் விடுதலைப்புலிகளும் ஒக்டோபர் மாதத்தில் பேச்சுநடத்துவது பற்றிய அறிவித்தலை இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டமை இலங்கைப் பிரச்சினையில் இருக்கக் கூடிய சர்வதேச சமூகத்தின் அழுத்தப்பாட்டின் வெளிப்பாடாகும்.

ஆக, எவ்வளது தூரம் தாக்குதல்கள், மோதல்கள் நடந்தாலும் இரு தரப்பையும் சமாதான மேசையில் இருத்தி பேச வைப்பதிலேயே சர்வதேச சமூகத்தின் அழுத்தம் இருப்பது ஏற்றுத்தானாக வேண்டும்.

கூடவே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரசு - புலிகள் முன்நிபந்தனை விதிக்கவில்லை என்ற எரிக்சொல்ஹெய்மின் அறிவிப்பும், இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவிப்புக்கு உரம் சேர்ப்பதாக இருக்கிறது.

அதேநேரம் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ரம்புக்வெல தெரிவிக்கின்ற கருத்துக்களைப் பார்த்தால் 'முருங்கை மரம்' தறிபடாமல் இருப்பது போலவே தெரிகிறது.

எதுவாயினும் இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் விடுக்கப்பட்ட அறிவிப்பு அரங்கேற வேண்டும் என்பதே பொது மக்களின் பிரார்த்தனையாகும்.

# உலர் உணவு விநியோகத்தைக் கண்காணிக்க கூட்டுறவுப் பரிசோதகர்கள் கடமையில்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்தவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படும் உலர் உணவு விநியோகத்தைக் கண்காணிக்க கூட்டுறவுத் திணைக்களப் பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படும் மோசடிகளை இவர்கள் கண்காணிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. றுகுணு கப்பலில் இருந்து இறக்கப்பட்ட உணவுப் பொருட்கள் பங்கீட்டு அட்டைகளுக்கு விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்படி 'உ' அட்டை உள்ளவர்களுக்கு பணத்திற்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கு இலவசமாகவும் உலர் உண்வுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

வழங்கப்படவுள்ள அரிசியின் விலை 40 ரூபாவாகவும் சீனி ஒருகிலோ 68 ரூபாவாகவும் மா ஒரு கிலோ 37 ரூபாவாகவும் மைசூர்பருப்பு ஒரு கிலோ 68 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகிறது. நாடளாவிய ரீதியில் இவ்விலைக்கே சகல பொருட்களும் விற்பனை செய்யப்படும்.

ஒரு அங்கத்தவர் கொண்ட அட்டைக்கு 4 கிலோ அரிசி, 2 கிலோ மா, ஒரு கிலோ சீனியும்;2 அங்கத்தவர்களைக் கொண்டவர்களுக்கு 8 கிலோ அரிசி, 4 கிலோ மா , ஒன்றரைக்கிலோ சீனியும்; 3 அங்கத்தவர்களைக் கொண்டவர்களுக்குப் 12 கிலோ அரிசி,6 கிலோ மா, 2 கிலோ சீனியும்; 4 அங்கத்தவர்களைக் கொண்டவர்களுக்கு 16 கிலோ அரிசி, 8 கிலோ மா , இரண்டரைக்கிலோ சீனியும்; 5 அங்கத்தவர்களைக் கொண்டவர்களுக்கு 20 கிலோ அரிசி,10 கிலோ மா , 3 கிலோ சீனியும் வழங்கப்படவுள்ளது.

இதேவேளை கடந்த ஜூலை, ஓகஸ்ட் மாதங்களுக்கான உலர் உணவு வழங்கப்படவுள்ளதாகவும் சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் ஜூலை மாதத்திற்குரிய பகுதியளவான உலர் உணவுகள் விநியோகிக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச–133)

# பாணுக்குத் தட்டுப்பாடு இன்னமும் நீங்கவில்லை

## மக்கள் கவலை

யாழ்ப்பாணத்தில் பாணுக்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் நிலவி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர். கோதுமை மாவுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டதிலிருந்து பாணை மட்டுமே காலை உணவாக உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது.

அதுவும் தற்போது பெற முடியாத நிலை தோன்றியுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். காலை 6 மணிக்கு ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படுவதற்கு முன்பாக பேக்கரிகளுக்குச் சென்று நீண்ட வரிசையில் நின்று 2 இறாத்தல் பாணை மட்டுமே பெற முடிவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாணுக்கு அதிகமாக மாணவர்களே வரிசையில் நிற்பதாகத் தெரியவருகிறது. இது இவ்வாறிருக்க நாயன்மார்கட்டு, இருபாலை, கல்வியங்காடு மற்றும்அரியாலை ஆகிய இடங்களில் உள்ள மக்கள் பாண் இல்லாது தினமும் காலையில் அலைந்துதிரிகின்றனர். ஒரு சில தனியார் கடைகளுக்கு சொற்ப பாண்கள் கிடைப்பதால் அவற்றை மக்களுக்கு வழங்குவதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இதேவேளை காங்கேசன்துறையில் தரித்து நிற்கும் கப்பலில் கோதுமை மா கொண்டு வரப்பட்டுள்ள நிலையிலும் பாணுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5,134)

# வன்முறைச் சம்பவங்களுக்கு இணைத்தலைமைகள் கண்டனம்

(பெல்ஜியம்)

முல்லைத்தீவு செஞ்சோலைப் படுகொலை உள்ளிட்ட அனைத்துவன்முறைகளுக்கும் இணைத்தலைமை நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

பெல்ஜியத்தின் பிரசெல்ஸில் நேற்று முன்தினம் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்ட முடிபில் வெளியிடப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டின் இணைத்தலைமைநாடுகளான நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா மற்றும் யப்பான் ஆகியவை பிரசெல்ஸில் செப்ரெம்பர் 12 ஆம் திகதி கூடின.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுக்கு நோர்வே அனுசரணையாளர்களிடம் இணக்கம் தெரிவித்திருப்பதை வரவேற்கிறோம். அனைத்து வன்முறைகளையும் இரு தரப்பினரும் உடனே கைவிட வேண்டும். அனுசரணையாளர்களால் முன்மொழியப்படும் ஏற்பாடுகளின் அடிப்படையில் இச் சந்தர்ப்பத்தில் இருதரப்பும் மேலதிக நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும். இரு தரப்பும் ஒப்புக் கொண்டதற்கிணங்க ஒக்டோபரில் ஒஸ்லோவில் பேச்சுக்கள் நடைபெறும். ஒக்டோபர் இறுதியில் பேச்சுக்கள் குறித்து ஆராய இணைத் தலைமை நாடுகள் கூட்டம் நடைபெறும்.

டோக்கியோவில் நடைபெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் விடுத்த அழைப்பை இருதரப்பும் நிராகரித்து போர் நடவடிக்கையில் தற்போதும் ஈடுபட்டு வருகின்றனர். நிலைமை மீளத்திரும்ப இருதரப்பும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அண்மைய யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்கள் தொடர்பாக இணைத் தலைமை நாடுகள் கவலை கொள்கிறது. வடக்குக் கிழக்கு அரசியல் பிரச்சினைக்கு போரின் மூலம் தீர்வு காண முடியாது. இருதரப்பும் பேச்சுக்களைத்தொடங்கி அரசியல் ரீதியான தீர்வுக்கான ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

தமிழ்–முஸ்லிம் மற்றும் சிங்கள இன மக்களின் சட்ட பூர்வ அபிலாசைகள் அங்கீகரிக்கப்பட்டு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதம் மற்றும் வன்முறைகளைக் கைவிட வேண்டும். ஐக்கிய இலங்கைக் கட்டமைப்புக்குள் அரசியல் தீர்வு ஏற்பட தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான சமரசங்களை மேற்கொள்ள வேண்டும் .

இராணுவமானது யுத்தநிறுத்த ஒப்பந்த சரத்துக்களை, மதித்துஅதன் கீழ்ப்படிந்து நடப்பது தொடர்பாக அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மற்றும் மனித உரிமை விதிகளை இருதரப்பும் மதித்து நடக்க வேண்டும். கணக்கில் அடங்காத காணாமல் போதல்,படுகொலைகள் மற்றும் பிரெஞ்சு அரசசார்பற்ற நிறுவனப்பணியாளர்கள் படுகொலை, பேருந்துக் கிளைமோர்த் தாக்குதல், முல்லைத்தீவு உள்ளிட்ட அனைத்து வன்முறைகளையும் இணைத்தலைமை நாடுகள் கண்டனம் செய்கிறது.

குறிப்பாக பாரியளவிலான மனித உரிமை முறைகேடுகள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறித்து இணைத் தலைமை நாடுகள் கவலை கொள்கிறது.

அரசார்பற்ற நிறுவனங்கள் மற்றம் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் பாதுகாப்புத் தொடர்பில் இருதரப்பும் உத்தரவாதம் அளிக்கவேண்டும்.சில அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையிலிருந்து வெளியேறியிருப்பதன் மூலம் பிரச்சினைக்குரிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சமூக ஆர்வலர்கள், ஊடகநிறுவனப் பிரதிநிதிகள்,மதத் தலைவர்கள் ஆகியவர்களின் பாதுகாப்புக்கும் ஊடக சுதந்திரத்திற்கும் உரிய தரப்பினர் உத்தரவாதம் அளிக்க வேண்டும். அச்சுறுத்தல், தாக்குதல் கள், படுகொலைகள் ஏற்க முடியாதது.

நோர்வேயின் அனுசரணைப்பணிகளுக்கும் கண்காணிப்புக் குழுவினரது பணிகளுக்கும் இணைத்தலைமை நாடுகள் தொடர்ந்து ஆதரவளிக்கும் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ச–5)

# இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத்தை தோற்கடித்துத் தாய்நாட்டைக் காப்பாற்றுவதற்காக இளைஞர்களைப் படையில் இணைத்துக் கொள்ளுமாறு இராணுவம் பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளது. இராணுவத்தில் இணைந்து கொள்ள வருபவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட ஆவணங்களில் நாடளாவிய ரீதியில் உள்ள ஏதாவது படைத்தலைமையகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்லாம் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இந்த நேர்முகப் பரீட்சைகள் நாளை வரை நடைபெறும். தேவையேற்படின் திகதி நீடிக்கப்படும்.

முப்படைகளிலிருந்தும் தப்பியோடியவர்களுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் கடற்படையிலிருந்து தப்பியோடியவர்களில் பலர் மீண்டும் இணைந்து கொண்டுள்ளதுடன் சேவையிலிருந்து விலகிச் சென்ற கடற்படை வீரர்களுள் ஆயிரத்து 200 பேர் மீண்டும் இணைந்து கொண்டுள்ளனர் என அவர் கூறினார். (ச–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகளுடன் சந்திப்பு

## அம்பாறையில் நடந்தது

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளுக் குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன் தினம் புலிகளின் கஞ்சிக்குடிச்சாறு பிரதேச அரசியல் பணிமனையில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டப் புலிகளின் அரசி யல் துறைப்பொறுப்பாளர் ஜெயா தலைமை யில் நடைபெற்ற இச் சந்திப்பில், அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டன.

இக் கலந்துரையாடலின்போது அக்கரைப் பற்று பிரதேசத்திற்கான செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி ஹரிஸ் மற்றும் அம்பா றை மாவட்ட வதிவிடப்பிரதிநிதிகளான மறி மற்றும் எமிலி ஆகியோரும், விடுதலைப்புலி களின் அம்பாறை மாவட்ட இராணுவத்தள பதி ஸ்டாலில் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடல் தொடர்பாக அம்பா றை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜெயா கருத்துத் தெரிவிக்கையில், அக்கரைப் பற்றுப் பிரதேசத்தில் இயங்கி வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் காரியாலயம் சுனாமி அனர்த்தத்தின் பின்னர் அம்பாறைக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனால் பல்வேறு பிரச் சினைகளுக்கு முகம் கொடுக்கும் தமிழ், முஸ்லிம் மக்கள் சரியான முறையில் முறைப் பாடுகள் எதனையும் செய்து கொள்ள முடி யாத நிலையில் உள்ளனர்.

போக்கு வரத்துக் கஷ்டத்தின் மத்தியில் அம்பாறை சென்று மக்களால் தெரிவிக்கப் படும் முறைப்பாடுகள் தொடர்பாக சரியான மொழி பெயர்ப்பு செய்யப்படாததினால் மக் கள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகிறது எனத் தெரிவித்தார். (ச-5)

# இராணுவ மீறல்கள் குறித்து பொதுமக்கள் முறையிடலாம்

## இராணுவப் பேச்சாளர் அறிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்தினரின் அத்துமீறல்கள் குறி த்து பொதுமக்கள் முறைப்பாடு தெரிவிக் கலாம் என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகவியலாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அண்மைய கடத்தல் சம்பவங்கள் குறித்து அரசாங்கம் கவலை கொள்கிறது.

இராணுவத்தினருக்கு எதிராக பொதுமக் கள் ஏதேனும் சாட்சியமுள்ள முறைப்பாடு வைத்திருப்பின் எம்மை அணுகலாம். அத்த கைய இராணுவத்தினர் மீது நாம் நடவடிக் கை மேற்கொள்வோம்.

தமிழ் மக்கள் மற்றும் ஊடகவியலாளர் கள் கடத்தப்படுதலுக்கும் படுகொலைகளுக் கும் தொடர்புடையோர் தண்டிக்கப்படுவர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# பொன்னாலை வரதராஜப் பெருமாளின் தேரிற்கு பெருமளவானோர் பங்கேற்பு

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய ரதோற்சவத்தில் நேற்று ஆயிரக்கணக்கான பக்தர் கள் கலந்து கொண்டனர்.

எனினும் கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனை மற்றும் பாஸ் நடை முறையால் ஆண்கள், பெண்கள் என மணிக்கணக்கில் வரிசையில் நின்றே வர்தராஜப் பெருமாளின் தேரேறும் காட்சியை காண முடிந்தது.

தேர் உற்சவத்திற்கு சென்றவர் களின் அடையாள அட்டையை பெற்றுக் கொண்ட கடற்படையினர் அவர்களுக்குரிய இலக்கத்தினை கைகளில் எழுதி விட்டமையால் அடையாள அட்டையை திருப்பிப் பெறுவதற்காக அதனை அழியா மல் பாதுகாக்கும் நடவடிக்கையில் மக்கள் ஈடுபட்டனர். இன்று வரதரா ஜப் பெருமாளுக்கு தீர்த்தோற் சவம் நடைபெறுகின்றது. (ச-5)

# பயங்கரவாத செயற்பாட்டை புலிகள் கைவிட வேண்டும்

## ஜனாதிபதி வேண்டுகோள்

பயங்கரவாத நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் கைவிடவேண்டுமென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் நிதித்துறை அமைச்சர்கள் மாநாட்டின் தொடக்க நிகழ்வில் அவர் உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க உலகம் இன்று ஐக்கியப்பட்டு நிற்கிறது. தமிழீழ விடு தலைப்புலிகள் தங்களது பயங்கரவாத நட வடிக்கைகள்ளக் கைவிட்டு அமைதியையும் அபிவிருத்தியையும் உருவாக்க முன்வர வேண்டும்.

பொதுநலவாய நாடுகளில் பயங்கரவா தம் என்பது பாரிய இடர்பாடுள்ள சவாலாக உள்ளது. இந்த சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாக உள்ளோம் என்றார் மகிந்த ராஜபக்ஷ.

இம் மாநாட்டில் 16 நாடுகளின் வெளிவிவ கார அமைச்சர்கள், 12 இதர அமைச்சர்கள், 18 செயலாளர்கள், 8 ரிசர்வ் வங்கி ஆளுநர் கள் மற்றும் 101 மூத்த அரச அதிகாரிகள் பங் கேற்றுள்ளனர். (ச-5)

# வவுனியாவில்...

கப்பட்டுள்ளனர். இதே வேளை வவுனியா கணேசபுரம் பகுதியில் தாக்குதல்களுக்காக வைக்கப்பட்டிருந்த 3 கிளைமோர் குண்டுகள், சி-4 ரக வெடி பொருட்கள் என்பன நேற்று காலை மீட்கப் பட்டுள்ளன.

இவை நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இரா ணுவத்தினரால் செயலிழக்க செய்யப்பட்டுள்ள தாக தெரி விக்கப்பட்டது. (ச-7)

# கண்காணிப்புத்...

லான சந்திப்பு நடைபெறும் திகதி, இடம் என்பன தொடர் பாக ஆரா யப்படவுள்ளதாக தெரிவிக்கப்ப ட்டது.

ஓமந்தை சோதனைச் சாவடியூடாக கிளிநொச்சி வரும் கண்காணிப்புக்குழுத் தலைவர் தமிழ்ச்செல்வ னுடனான சந்திப்பை முடித் துக் கொண்டு கொழும்பு சென்று புலிகளின் முடிபு குறித்து நோர்வேக்கு அறி விப்பார் என தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

# யுத்தத்திற்காக...

அமைதி முயற்சிகளுடன் இணைந்ததாக இராணுவம் செயற்பட்டு வருகிறது. நமது இராணுவத்தினரை உற்சாகப்படுத்தும் வகையிலான செய்திகளையே ஊடகங்கள் வெளியிடவேண்டும் என அவர் கூறியுள் ளார். (ச-5)

# இடம், திகதி...

தலைமை நாடுகள் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பெளயர் கூறினார்.

ஆனாலும் திகதி மற்றும் இடம் ஆகியவை குறித்து இரு தரப்பும் மத்தியஸ்தர்களான நோர்வேயும் இணக்கம் காணவேண்டும் என வும் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இவை குறித்து இது வரை விவாதிக்கப்பட வில்லை. இனி வரும் தினங்களில் அவை குறித்து முடிவெடுக்கப்படும் என வும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் நீண்ட காலமாக விடுதலைப் புலிகளுடன் முழுமை யான யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு தயார் என நோர்வேயிடம் கூறி வந் தது.

தற்போது விடுதலைப்புலிக ளும் கூறியுள்ளனர். இந்த சந்தர்ப்பத் தை நழுவவிடாமல் பேச்சுவார்த் தைக்கான திகதி, இடம் குறிப்பதில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் இலங் கைக்கான விசேட சமாதானத் தூது வர் ஹான்சன் பெளயர் மேலும் தெரிவித்தார். (ச-5)

# 600 பயணிகளை...

இருந்து வேம்படிச் சந்தி வரை யான பாதையின் போக்குவரத்து துண் டிக்கப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்க யாழ். பல்க லைக்கழகத்தைச் சேர்ந்த வெளி மாவட்ட மாணவர்கள் காலை முதல் பிற்பகல் வரை கால்கடுக்கக் காத் திருந்த போதிலும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் கள் மாலை வரை காத்திருந்த பின் விடுதிகளுக்குத் திரும்பியுள்ள னர். (ச-133)

# மகிந்த...

நேற்று நடைபெற்ற சந்திப்புக் கள் தொடர்பான முடிபுகள் ஜனாதி பதி கியூபாவிலிருந்து திரும்பிய தும் வெளியிடப்படும் என முடிவெடுக் கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# நோர்வே...

அறிவித்திருந்தது.

இந் நிலையில் இன்று நடை பெறும் இச் சந்திப்பில் அரசதரப்பின் நிலைப்பாடு, பேச்சிற்கான அட்ட வணை குறித்து விவாதிக்கப்படு மென தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# நிபந்தனையற்ற பேச்சுக்களுக்கு...

அவர் மேலும் தெரிவிக்கையில், எப்போது பேச்சுக் களை ஆரம்பிப்பது, திகதி மற்றும் நேர அட்டவணை தயாரிப்பதில் தற்போது கவனம் செலுத்தி வருகிறது என்று குறிப்பிட்ட கோஹன்ன அரசு எப்போதும் பேச் சுக்குத் தயாராகவே உள்ளது என்றும் கூறினார்.

பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னதாக அனைத் துத்தாக்குதல்களும் நிறுத்தப்படும் என விடுதலைப் புலிகளின் தலைவரிடமிருந்து உறுதியான தெளிவான வாக்குறுதி வழங்கப்படுவது அவசியம் என்றும் பாலித கோஹன்ன தெரிவித்தார்.

பேச்சுக்கள் நடைபெறும் போது விடுதலைப் புலிகள் சர்வதேசத்தின் எந்தப்பகுதியில் இருந்தும் ஆயு தங்களை நாட்டுக்குள் எடுத்து வராது தடுப்பதில் இணைத் தலைமை நாடுகள் முழுமையான கவனம் எடுப்பது அவசியம் என்று தற்போது இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தை குறித்து அரச சமாதான செயலகம் வெளி யிட்டுள்ள அறிக்கை வருமாறு,

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற் கான இணைத்தலைமைத்துவ நாடுகள் மேற்கொள் ளும் முயற்சிகளை அரசாங்கம் வரவேற்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முழுமையான மற்றும் கண்காணிக்கப்படக்கூடிய யுத்தநிறுத்தத்திற்கான தெளிவான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினால் அவர்களுடனான பேச்சுக்களை ஆரம்பிக்கத்தயாராக இருப்பதாக இலங்கையில் உள்ள இணைத் தலைமைத்துவ நாடுகளின் தூது வர்களை சந்தித்த பின் 2006 ஆகஸ்ட் 22 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுத்த அறிவிப்பை அரசாங்கம் மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

இவ் அணுகுமுறையை அனுமதித்து சகல ஒப்பந் தங்களையும் அனுசரிப்பதோடு பயங்கரவாதம் மற்றும் வன்முறையை புலிகள் கைவிடவேண்டு மென இணைத்தலைமைத்துவ நாடுகள் தெரிவித்த நிலைப்பாடு பற்றி அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது.

இணைத் தலைமைத்துவ நாடுகள் 2006 செப் ரெம்பர் 12 ஆம் திகதி விடுத்த அறிக்கையில் அடங் கியுள்ள சில விடயங்கள் பற்றி அரசாங்கம் பாரிய மனத்தாங்கலைக் கொண்டுள்ளது.

அதாவது அரசாங்கத்துடன் முன்கூட்டிக் கலந்து ரையாடாமல் திகதிகள் மற்றும் இடம் பற்றி நடைமு றைக்கு ஒவ்வாத விதத்தில் அவ் அறிக்கை உறுதிப்பா டுகளைச் செய்துள்ளது.

முல்லைத்தீவில் பாடசாலை ஒன்றின் மீது குண் டுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றஞ்சாட்டுவது போன்ற உண்மைக்குப் புறம்பான மற்றும் தப்பவிப்பி ராயத்தை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் அவ்வறிக் கையில் அடங்கியுள்ளது பற்றியும் அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்க ளை நடத்த அரசாங்கம் திடமாக உறுதி பூண்டுள்ளது. ஆயினும் திகதிகள் மற்றும் இடம் தொடர்பான ஏற் பாடுகள் இலங்கை அரசாங்கம் மற்றும் அனுசர ணையாளர்களிடையே கலந்துரையாடப்பட்டு தீர்மா னிக்கப்படவேண்டியதாகும் என அரச சமாதான செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (ச-5)

A SERVICE OF REMEMBRANCE AND THANKSGIVING
FOR THE LIFE AND SERVICE OF

LATE MR.S.THANAPALAN
Emeritus Principal, St.John's College, Jaffna
will be held on
Friday 15 th Septemper 2006
at
St.John the Baptist's Church, Chundikuli
at
3.00 p.m.
Old Boys, parents, friends and well-wishers are welcome.

Principal & Staff
St.John's College, Jaffna
(C-444)

Hatton National Bank
அடகுக் கடன் வசதி பெற்ற வாடிக்கையாளர் கவனத்திற்கு
2005-ம் ஆண்டு புரட்டாதி 12-ம் திகதிக்கு முன்னர் எமது வங்கியில் அடகுக் கடன் வசதி பெற்று, தற்போதைய சூழ்நிலை காரணமாக அடகு நகைகளை குறிப்பிட்ட 12 மாத காலப் பகுதியில் மீட்க/ காலாவதித்திகதியை நீடிக்க தவ றிய வாடிக்கையாளர்கள், வங்கி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு காலாவதித் திகதியை நீடித் துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தங்களது முகவரியில் ஏதாவது மாற்றம் இருப்பின் உடனடியாக அறியத்தரவும்.
முகாமையாளர்
(யாழ். கிளை)
(C-443)

இப்பத்திரிகை வலம்புரி அச்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org